**இயக்கூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

MCOP.No. 142/2024

**ம.சா. 1**

**திரு. கௌதம்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து சமயத்தில் நான் இருசக்கர வாகனத்தை ஓட்ட எனக்கு பின்னால் சின்னப்பொண்ணு மற்றும் ராக்கம்மாள் அமர்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு உரிமம் இல்லை என்றால் உள்ளது. மேற்படி ஓட்டுநர் உரிமத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மோ.வா.ஆய்வாளரிடமும் எனது ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். உண்மையில் எனக்கு ஒட்டுநர் உரிமம் இருந்திருந்தால் அதனை சமர்ப்பித்திருப்பேன் என்றும், இல்லையென்பதால் தான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால்சரியல்ல. எனக்கு முறையாக இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாது என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் 3 நபர்கள் அதில் பயணம் செய்ததால் தான் நிலைதடுமாறி நானாகவே விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால்சரிதான். விபத்து நடந்த ரோடானது நேர் ரோடு, வளைவான ரோடல்ல என்றால் சர்வீஸ் ரோடு. நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக் சென்று கருமத்தம்பட்டிபுதூர் செல்வதற்காக வடக்கிலிருந்து தெற்காக ரோட்டை கடந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திலிருந்து 130 அடி தள்ளி தான் மேற்காக கருமத்தம்பட்டிபுதூர் செல்வதற்கு ரோடு உள்ளது என்றால் சரிதான். நான்

கருமத்தம்பட்டிபுதூர் பிரிவு அருகே சென்று ரோட்டை கடக்காமல் அதற்கு முன்பாகவே சர்வீஸ் ரோட்டின் குறுக்காக கடந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை நான் ரோட்டை குறுக்காக கடக்கும்போது கவனித்தேனா என்றால் சற்று தொலைவில் தான் வந்தது. சாலை விதிகளின்படி ரோட்டை குறுக்காக கடப்பவர் தான் ரோட்டின் இருபுறங்களிலும் வாகனம் வருகிறதா இல்லையா என்று கவனித்து பின்னிட்டு கடக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி இருசக்கர வாகனத்தை நான் பார்த்து நின்று ரோட்டை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. விபத்து நடந்தது கிழமேல் ரோட்டில் தென்புற பகுதி என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கிழமேல் ரோட்டின் தென்புறமாகத்தான் வரவேண்டும் என்றால் சரிதான். 1ம் எதிர்ம-னுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து ரோட்டின் தென்புற பகுதியில் வந்தார் என்றும், நான்தான் ரோட்டை திடீரென்று கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே தலைகசவம் அணிந்திருந்தால் எனக்கு தலையின் பின்பகுதியிலும், கழுத்து பகுதியிலும் காயமேற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு எலும்பு முறிவு மற்றும் நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிசியோதெரபி சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு சிகிச்சை எடுத்திருந்தால் அதற்குண்டான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கோவை அரசு மருத்துவமனையில் தான் அறுவை

சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்றால் இல்லை, கோபி தட்சின் மருத்துவமனையில்தான் செய்யப்பட்டது. கோவை அரசு மருத்துவமனையில் 9 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்தேன் என்றால் சரிதான். கோவை அரசு மருத்துவமனையில் தான் எனக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டு அறுவை சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் அனைத்தும் மிகைப்படுத்தி அதிக இழப்பீடு பெறவேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கு ஊனச்சான்று வழங்கிய சமயத்தில் அறிவியல் ரீதியான சோதனைகள் செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழங்கியுள்ள ஊனச்சான்றிதழானது உரிய பரிசோதனை மேற்கொள்ளாமல் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்ட ஆவணம் எனவே அது ஏற்கத்தக்கதல்ல என்றால்சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகப்படியானது என்றால்சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிகளை மீறியுள்ளதால் இந்த 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல, எனவே 3ம் எதிர்மனுதாரருக்கு எதிரான மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.